**கொஹுவல மற்றும் கட்டம்பே மேம்பாலங்களின் வடிவமைப்பு மற்றும் செயற்திட்டம் - 2023**

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

கொஹுவல மற்றும் கட்டம்பே மேம்பாலங்களின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கொழும்பு மாவட்டத்தில் கொஹுவல மற்றும் கண்டி மாவட்டத்தில் கட்டம்பே ஆகிய இடங்களில் அமைக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள மேம்பாலங்களை வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கொஹுவல மேம்பாலம் மற்றும் கட்டம்பே மேம்பாலம் ஆகிய 02 தளங்களின் கீழ் இச்செயற்திட்டத்தின் செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,167 மில்லியனிற்கு சமமான யூரோ 54.974 மில்லியனானதுடன் அதில் ரூபா 10,192 மில்லியனிற்கு சமமான யூரோ 52 மில்லியன் ஹங்கேரியன் ஏற்றுமதி - இறக்குமதி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 975 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2021 ஆகஸ்ட் 16 இல் தொடங்கியிருந்ததுடன் 2024 பெப்ரவரி 15 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற

அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்ததாரருக்கான கொடுப்பனவுகள் தாமதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் விளைவாக, ஒப்பந்த உடன்படிக்கையின் 14.8 ஆம் பிரிவின் பிரகாரம் செலுத்த வேண்டிய தொகை ரூபா 157.85 மில்லியனாகும். எவ்வாறாயினும், பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 08 இன் 100 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் அது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 157.85 | இது தவறுதலாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அனைத்து நிகழ்வுகளும் கொடுக்கல்வாங்கல்களும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் பதிவு செய்யப்பட்டுள்ளன. |
| (ஆ) | 270 ஆம் இலக்க காணித் துண்டுக்கான சட்டரீதியான இழப்பீடு மற்றும் காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றக் குழுவின் (LARC) ரூபா 13.99 மில்லியன் படிகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் செலுத்தப்பட வேண்டிய மீதியாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. எனவே, 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொறுப்பு மற்றும் நடைமுறை வேலை மீதிகள் அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | 13.99 | 270/520801/08 ஆம் இலக்க காணித்துண்டிற்கான உறுதிச்சீட்டு 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு PMU இற்கு கிடைத்திருக்கவில்லை. | பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்று அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 20 இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்களுக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 2,418.21 மில்லியன் கடன் வழங்குபவரின் இணக்கபாடின்றி நிதி நிலைமைக் கூற்றில் உரிமை | 2,418.21 | இணங்கப்பட்டது. அடுத்த நிதிக்கூற்றிலிருந்து இது சீர்செய்யப்படும். | நிதிக்கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

மூலதனத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது. எனவே, மீளாய்வாண்டில் அந்தத் தொகையால் பொறுப்பு குறைத்துக் காட்டப்பட்டதுடன் உரிமை மூலதனம் அதிகரித்துக் காட்டப்பட்டது.

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டம்பே மற்றும் கொஹுவல மேம்பாலங்களின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணத்திற்கான முன்மொழிவு 2019 மார்ச் 26 இல் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழுவால் (CANC) மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் பெறுகை வழிகாட்டலின் 2.8.2 ஆம் பிரிவின் பிரகாரம் பரஸ்பர இடைநிறுத்தத்திற்கான பரிந்துரை திறைசேரி உறுப்பினர் உட்பட TEC உதவுகின்ற அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழுவால் எடுக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் அதற்கேற்ப செயற்படவில்லை என்பதும், திறைசேரி உறுப்பினர் இல்லாத TEC ஆல் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் அமைச்சரவை விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டு, 2023 மே 31 இல் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2023 யூலை 04 இல் நிதி அமைச்சரின் அவதானிப்புடன் அந்த விஞ்ஞாபனத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்திருந்தது. இதன் விளைவாக 2024 திசெம்பர் 31 வரை செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை இடைநிறுத்துவதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் மேலதிக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தார். எனவே கைச்சாத்திடப்பட்ட மேலதிக | இணங்கப்படவில்லை. ஒப்பந்ததாரர் பணி இடைநிறுத்தத்தை சமர்ப்பிக்கும் போது, அவர்கள் மொத்த கிரய உரிமைக்கோரிக்கையை சமர்ப்பித்திருக்கவில்லை. யூரோ 448,452.56 உரிமைக்கோரல் MPC இன் வரம்புக்குள் வருகிறது. எனவே, MPC இற்கு உதவுவதற்கு TEC அமைச்சினால் நியமிக்கப்படுகிறது. எனினும், ஒப்பந்ததாரர் தற்போது மொத்த தோராயமான கிரய கோரிக்கையை சமர்ப்பித்துள்ளார், இது அமைச்சரவை நியமித்த பெறுகை குழுவால் (CAPC) கையாளப்பட வேண்டியுள்ளது. அதன் பிரகாரம் எதிர்வரும் காலங்களில் திறைசேரியில் இருந்து பொருத்தமான TEC ஐ நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர், TEC நியமனம் குறித்து முறையான விசாரணையை நடாத்தி, ஒழுக்காற்று நடவடிக்கையை எடுப்பதற்கும், பெறுகை வழிகாட்டல் ஏற்பாடுகளை மீறும் அதிகாரிகளிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கைக்கான நடைமுறைகள் வரிசை அமைச்சு மற்றும் அதிகாரசபையால் பின்பற்றப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 3.1.(அ) ஆம் பந்தியின் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கையின் 19.2 ஆம் உட்பிரிவை கருத்தில் கொள்ளாமல், கட்டம்பே மேம்பாலத்திற்கு 433 நாட்கள் கால நீடிப்பை (EOT) வழங்குவதற்கு TEC பரிந்துரைத்தது, அதில் ஒப்பந்ததாரர் Force Majeure இன் அறிவிப்பை சூழ்நிலையின் நிகழ்வு பற்றி தெரிந்துகொண்ட பின்னர் 14 நாட்களினுள் சமர்ப்பிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதுடன் கடன் உடன்படிக்கையின் 20.1 ஆம் உட்பிரிவு ஒப்பந்ததாரர் வேலையை இடைநிறுத்துவதற்கு கூடிய விரைவிலும் நிகழ்வு அல்லது சூழ்நிலையைப் பற்றி அறிந்த பின்னர் 28 நாட்களுக்குப் பிந்தாமலும் அறிவிப்பை வழங்குவார் என்று குறிப்பிடுகிறது. | ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளின் 2.4 ஆம் உப உட்பிரிவைக் குறிப்பிடும் செயற்திட்டத்திற்கு நிதியளிக்கும் ஏற்பாடுகள் குறித்த நியாயமான சான்றுகளை சமர்ப்பிக்குமாறு, 2022 ஏப்ரல் 22 இல் ஒப்பந்ததாரர் தொழில்தருநரிடம் கோரிக்கை விடுத்தார். எவ்வாறாயினும், நிலவும் பொருளாதார நெருக்கடியின் கீழ், நிதி அமைச்சால் அத்தகைய தகவலை உறுதிப்படுத்த முடியவில்லை என்பதால், தொழில்தருநரால் உறுதியான பதிலை அளிக்க முடியவில்லை. எனவே ஒப்பந்தப்படி 2022 மே 20 இற்குப் பின்னர், எந்த நேரத்திலும் ஒப்பந்ததாரர் பணிகளை நிறுத்தி வைப்பது அல்லது பணிகளின் விகிதத்தைக் குறைப்பது குறித்து அறிவிக்கலாம். | முறையற்ற பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான மேலதிக கிரயத்தை முறையற்ற பரிந்துரைகளை வழங்கிய அதிகாரிகளிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பந்தி 3.1.(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள TEC மற்றும் TEC ஒப்பந்த உடன்படிக்கையின் 20.1 ஆம் உட்பிரிவை கருத்தில் கொள்ளாமல், கொஹுவல மேம்பாலத்திற்கு 315 நாட்கள் கால நீடிப்பை (EOT) வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டது. இதில் நிகழ்வு அல்லது சூழ்நிலையைப் பற்றி அறிந்த பின்னர் கூடிய விரைவிலும் 28 நாட்களுக்குப் பிந்தாமலும் ஒப்பந்ததாரர் அறிவிப்பை வழங்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. 2022 யூன் 27 இல் “14.7 கொடுப்பனவின் காலம்” என்ற | நிலவும் பொருளாதார நெருக்கடியின் கீழ், நிதி அமைச்சால் அத்தகைய தகவலை உறுதிப்படுத்த முடியவில்லை என்பதால், தொழில்தருநரால் உறுதியான பதிலை அளிக்க முடியவில்லை. எனவே ஒப்பந்தப்படி 2022 மே 20 இற்குப் பின்னர், எந்த நேரத்திலும் ஒப்பந்ததாரர் பணிகளை நிறுத்தி வைப்பது அல்லது பணிகளின் விகிதத்தைக் குறைப்பது குறித்து அறிவிக்கலாம். | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் மோசமான செயற்திட்ட முகாமைத்துவம் குறித்து விசாரணை நடாத்தி, TEC மேற்கொண்ட முறையற்ற பரிந்துரைகளை மறுமதிப்பீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உப உட்பிரிவுடன் தொழில்தருநர் இணங்கத் தவறியதால், ஒப்பந்த உடன்படிக்கையின் 16.1வது உட்பிரிவின் பிரகாரம் பணி விகிதத்தைக் குறைக்க வேண்டும் என்று ஒப்பந்ததாரர் கோரிக்கை விடுத்தார். எவ்வாறாயினும், ஒப்பந்ததாரர் கோரிக்கைகளின் பிரகாரம் பணியை இடைநிறுத்தியிருக்காததுடன் TEC இந்த கோரிக்கையை கருத்தில் கொண்டிருந்ததுடன் தொழில்தருநரிடம் கையகப்படுத்துவதில் தாமதம் மற்றும் ஒப்பந்ததாரரிடம் தளத்தை ஒப்படைக்க தாமதமானது ஒப்பந்த உடன்படிக்கையின் 20.1 ஆம் உட்பிரிவை கருத்தில் கொள்ளாமல் மேலே குறிப்பிடப்பட்ட TEC ஆல் கருத்தில் கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | ஒப்பந்த உடன்படிக்கையின் 14.2 வது உட்பிரிவின் பிரகாரம் ஒப்பந்ததாரருக்கு முற்பணமாக யூரோ 10 மில்லியன் தொழில்தருநரிற்கு வழங்கப்பட்டிருந்தன. 2023 ஒக்தோபர் 25 இல் தொழில்தருநர் செயற்திட்டத்தை பரஸ்பரம் இடைநிறுத்துவதற்கு முடிவு செய்த போதிலும், ஒப்பந்ததாரருக்கு யூரோ 6.14 மில்லியனுக்கான நிலுவை கொடுப்பனவின் போது முற்பணத்தில் யூரோ 7.23 மில்லியன் அறவீட்டு மீதி இருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தை பரஸ்பரம் இடைநிறுத்தும் போது இந்த மீதிகள் கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பொறியியல் மேலதிக செயலாளரால் நியமிக்கப்பட்டது தாமதக் கொடுப்பனவு காரணமாக நிதிக் கட்டணங்களை மதிப்பிடுவதற்கு யூரோ 448,452.56 TEC இற்கு நிதிக் கட்டணத் தொகையாக செலுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டது. | ஒப்பந்ததாரருக்கு தொழில்தருநரின் தாமதமான கொடுப்பனவிற்கான நிதிக் கட்டணங்கள் ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் உள்ளன. இந்த இரண்டு கொடுப்பனவுகளும் பரஸ்பர இடைநிறுத்தத்தில் குறுக்கீட்டை கொண்டிருக்கவில்லை. பரஸ்பர இடைநீக்கத்தின் நோக்கம், தொழில்தருநரால் ஒப்பந்தத்தின் பொருண்மையான மீறலின் விளைவாக தொழில்தருநரின் அபாயத்தைத் தணிப்பதாகும். | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் மோசமான செயற்திட்ட முகாமைத்துவம் குறித்து விசாரணை நடாத்தி, TEC வழங்கிய முறையற்ற பரிந்துரைகளை மறுமதிப்பீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2023 ஒக்தோபர் 25 இல் சட்டமா அதிபரிடம் இருந்து இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்ளாமல் ஒப்பந்ததாரருடன் செயற்திட்டத்தை இடைநிறுத்துவதற்கான துணை உடன்படிக்கையில் RDA இன் தலைவர் நுழைந்திருந்தார். | துணை உடன்படிக்கைகள் புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தின் செல்லுபடியாகும் காலத்தைத் தவிர, MOU அல்லது ஒப்பந்தத்தின் எந்தவொரு விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் மாற்றுவதில்லை. | சட்டமா அதிபரிடம் இருந்து இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் எதிர்காலத்தில் இத்தகைய காலம் கடப்பதை தவிர்ப்பதற்கு உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும். |
| (ஊ) | செயற்திட்டத்தின் தாமத கொடுப்பனவு காரணமாக, பெறுகை வழிகாட்டலின் 2.8.2 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக் கட்டணங்களை மதிப்பிடுவதற்கு TEC நியமிக்கப்பட வேண்டும், TEC உதவுகின்ற அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழு, திறைசேரியின் ஒரு உறுப்பினர் பிரதிநிதி உட்பட ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் வரிசை அமைச்சின் செயலாளரின் பரிந்துரையுடன் தேசிய பெறுகை முகவராண்மையால் (NPA) நியமிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கொஹுவல மற்றும் கட்டம்பே மேம்பால செயற்திட்டத்தில் தாமதம் காரணமாக நிதிக் கட்டணங்களை மதிப்பிடுவதற்காக நியமிக்கப்பட்ட TEC, திறைசேரியின் உறுப்பினர்களைக் கொண்டிருக்கவில்லை, மேலும் TEC போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பொறியியல் மேலதிக செயலாளரால் நியமிக்கப்பட்டது. எனவே, யூரோ 448,452.56 தொகையான நிதிக் கட்டணங்களுக்கான பரிந்துரை பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் சரியான TEC மூலம் எடுக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | 3.1.(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பதிலைப் பார்க்கவும். | முறையற்ற பரிந்துரைகளை அமுல்ப்படுத்துவதற்கான மேலதிக கிரயத்தை முறையற்ற பரிந்துரைகளை வழங்கிய அதிகாரிகளிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | பின்வரும் ஒப்பந்தப் பணிகளை பூர்த்திசெய்யாமல் கொஹுவல மேம்பாலம் 2024 யூலை 17 முதல் பொதுமக்களுக்கு திறந்து விடப்பட்டுள்ளது.<br>• பிலியந்தலை இறுதிச் சேவைகள் வீதிப் பணிகள்<br>• கொழும்பு இறுதிச் சேவைகள் வீதிப் பணிகள்<br>• பிலியந்தலை இறுதி அணுகுமுறை வடிகால் பணிகள்<br>• பிலியந்தலை இறுதி அணுகுமுறை வடிகால் பணிகள்<br>• பாதசாரி பாதை அமைத்தல்.<br>• கொஹுவல சந்தி மற்றும் சந்தியை மேம்படுத்தும் வடிகால் பணிகள்<br>• சந்தி சமிக்ஞை<br>• மேம்பாலம் மற்றும் சேவைகள் வீதிகளில் தெருவிளக்குகள் நிறுவுதல்<br>• மேம்பாலத்தின் வடிகால் பணிகள் | பொதுமக்களின் குறைகளை கருத்தில் கொண்டு அரசாங்கத்தின் கோரிக்கையை ஏற்று இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | மிகுதி பணிகளை பூர்த்தி செய்வதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | 2018 ஆம் ஆண்டில் வரி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப மதிப்பீட்டின் பிரகாரம் கொஹுவல மற்றும் கட்டம்பே ஆகிய இடங்களில் மேம்பாலம் அமைப்பதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு நாளொன்றுக்கு ரூபா 4.25 மில்லியன் கிரயம் சேமிக்கப்படும் என கண்டறியப்பட்டுள்ளது. எனினும், நிர்மாணப் பணிகளை தாமதப்படுத்துவது, செயற்திட்டத்தின் விளைவை தாமதப்படுத்துவதற்கு காரணமாகும். | இணங்கப்பட்டது. எனினும், தாமதத்திற்கான அடிப்படைக் காரணங்கள் எதிர்பாராதவை என்பதுடன் இயற்கையில் பெரும்பாகம் ஆகும், இது தொழில்தருநரின் கட்டுப்பாட்டிற்கு அல்லது எல்லைக்கு அப்பாற்பட்டது. | நிர்மாணப் பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டம்பே மேம்பாலத்துக்காக காணி சுவீகரிப்பு சட்டத்தின் 07வது பிரிவின் கீழ் 152 காணித்துண்டுகள் வர்த்தமானியில் | நில அளவைத் திணைக்களத்தினால் அளவை வரைபடங்கள் தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டமை | காணி சுவீகரிப்பு செயன்முறையை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளியிடப்பட்டிருந்த போதிலும், 2023 ஆம் ஆண்டின் இறுதிவரை அந்த காணிகளுக்கான மதிப்பீட்டு அறிக்கைகள் PMU ஆல் பெறப்படவில்லை. அதுமட்டுமல்லாமல் PMU கொஹாவளை மேம்பாலத்திற்காக சுவீகரிக்கப்பட்ட 160 காணித்துண்டுகளில் 91 காணித்துண்டுகளுக்கு இழப்பீட்டு கொடுப்பனவு மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனவே, இரண்டு மேம்பாலங்களுக்கும் காணி சுவீகரிப்பு முன்னேற்றம் குறைந்த அளவில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | மற்றும் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீட்டு அறிக்கைகள் தாமதமாக வழங்கப்படுவதனால் கொஹுவளையில் முன்னேற்றம் தாமதமானது. | |
| (ஆ) | கொஹுவல மேம்பாலத்திற்காக சுவீகரிக்கப்பட்ட 51 காணித்துண்டுகளுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவை PMU பூர்த்தி செய்திருந்த போதிலும், காணி சுவீகரிப்பு சட்டத்தின் 44 வது பிரிவின் பிரகாரம் சான்றிதழ் மீளாய்வாண்டின் இறுதியில் PMU ஆல் பெறப்பட்டிருக்கவில்லை. | இப்பணிகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 5 காணித்துண்டுகள் மாத்திரமே செயன்முறைப்படுத்தப்பட்டுள்ளன, அவை பிரிவு 44(1) ஐ வழங்கத் தயாராக உள்ளன. | காணி சுவீகரிப்பு செயன்முறையை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |